தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2015 | ஆடவை 31 (15-7-84) | 65 காசுகள் | இதழ் எண்: 41 | பகுதி- 29-30

பல்லடம் வட்டம் விசைத்தறித் தொழிலர்க்கு இழைக்கப்படும் கொடுமைகள்!

தொழில் சட்டம் புறக்கணிக்கப்படுகிறது; தொழிலாளர் நல அதிகாரிகள் கையூட்டுப் பெற்றுக்கொண்டு தூங்குகிறார்கள்!

தொழில் துறையும், அமைச்சரும் இதில் உடனே கவனம் செலுத்தி சரிசெய்ய வேண்டும்!

பல்லடம் வட்டத்தில் (பல்லடம், திருப்பூர், சோமனூர் அடங்கிய பகுதிகளில்) 15,000 விசைத்தறிகள் இயங்கி வருகின்றன. இத் தொழிலில் நேரடியாக 15,000 தொழிலாளர்களும் மறைமுகமாக 5,000 தொழிலாளர்களும் (தோராயமாக) பணி செய்து வருகிறார்கள். இத் தொழிலை நம்பி 20,000 குடும்பங்கள் பல்லடம் வட்டாரத்தில் அன்றாடக் கூலிகளாக இருந்து வருகிறார்கள்.

நிலையிலாப் பணி

அப்படி வேலை செய்து வருகின்ற 20,000 தொழிலாளர்களில் யாருக்குமே தொழிலாளர் நலன்களுக்குரிய சட்டப்படி எந்த வகைப் பதிவோ, பணிச் சான்றோ கிடையாது. இத்தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட எந்த முதலாளியிடமும் இத்தனை நாள் வேலை செய்தோம் என்பதைச் சான்றுடன் மெய்ப்பிக்க முடியாது.

விசைத்தறி உரிமையாளர்கள் எந்தத் தொழிலாளியையும் எந்த நேரத்திலும் எந்தக் கரணியமும் இன்றி தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கு உகந்த முறையில் பணி நீக்கம் செய்யலாம்; செய்தும்வருகிறார்கள் என்ற இழிநிலையிலுள்ளது.

இந்த விசைத்தறித் தொழிலில் 8 அகவை முதல் 14 அகவை வரையுள்ள சிறுவர் சிறுமியர் கூட தோராயமாக 4,000 பேர்கள் வேலை செய்து வருகிறார்கள். (14 அகவைக்குள் உள்ள சிறுவர்களைப் பணிக்கு வைத்துக் கொள்ளக் கூடாது என்னும் தொழில் சட்டம் இங்குப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது)

மிகக் குறைவான கூலி

இவ் விசைத்தறித் தொழிலாளிகள் ஒரு நாளைக்குப் பகல் வேலையாக இருந்தால் 10மணி நேரமும், இரவு வேலையாக இருந்தால் 14 மணி நேரமும் கடுமையாக ஓய்வின்றி வேலை செய்கிறார்கள்.

அப்படி வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு 10 மணி நேர வேலையாக இருந்தால் 12 உருபாவும், 14 மணி நேர இரவு வேலைக்கு 15 உருபாவும் மிகக் குறைந்த கூலியாக நாளொன்றுக்குக் கொடுக்கப் பெறுகிறது.

8 முதல் 14 அகவை வரையுள்ள சிறுவர் சிறுமியர்களிடமும் அதே 10 மணி, 14 மணி நேர உழைப்பையும் பெற்றுக் கொண்டு, நாளொன்றுக்கு நாட்கூலியாக 3 முதல் 4 உருபா வரை கொடுக்கப்படுகிறது.

இவ்வாறு துன்பப்பட்டுக் குறைகூலிக்கு மிகை உழைப்பு வாங்கப்படுகிற எத்தொழிலாளிக்கும் பணிக்காலத்தில் ஏற்படுகின்ற ஏதங்களில் உடல் உறுப்பில் ஊறு ஏற்பட்டாலோ அல்லது உயிரிழப்பு ஏற்பட்டாலோ எவ்வகை இழப்பீடும் வழங்கப்படுவது இல்லை.

விடுமுறையிலும் கட்டாய உழைப்பு!

மேலும் இவ் விசைத்தறித் தொழிலாளர்களுக்கு(சம்பளத்துடன் கூடிய) கிழமை விடுமுறையோ மாத மற்றும் விழாக்கால விடுமுறையோ, விடப்படுவதில்லை. மேநாள் போன்ற தொழிலாளர்களின் விழாவுக்குக் கூட விடுமுறை விடப்படாமல் கட்டாய உழைப்பு வாங்கப்படுகிறது. எனவே ஆண்டு முழுவதும் எத் தொழிலாளிக்கும் எவ்வகை விடுப்பும் கிடையாது.

எந்தத் தொழிலாளியும், வேலை செய்ய இயலாத அகவை முதிர்ச்சி பெற்ற நிலையில் வாழ்க்கைக்கு எவ்வகை வருவாயுமின்றி அத் தொழிலாளியின் குடும்பமே நடுத் தெருவில் நிற்கும் அவல நிலை உள்ளது.

உரிமைகளை அறியா ஏழை மக்கள்!

இத்தொழிலுக்குச் சிறு அகவையிலேயே பிழைக்க வழியின்றி வரவேண்டிய கட்டாய நிலையுள்ளதால் பள்ளிப் படிப்பைக்கூட படிக்க முடியாமல் கல்வி அறிவற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விசைத்தறித் தொழிலாளர் நல உரிமைகளைக்கூட உணர்ந்து கொள்ளாத இரங்கத்தக்க நிலை இருக்கிறது

சில வேளைகளில் தொழிலாளர்கள் உரிமை உணர்வால் உந்தப்பட்டுச் சிதறிக் கிடக்கும் தொழிலாளர்கள் ஒன்று சேருகின்ற நிலைகளில், தொழிலாளர்களின் அறியாமை நிலையைப் பயன்படுத்தி இங்குள்ள அரசியற் கட்சிகள் தன்னலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களுக்கு எவ்வகையான தொழிற்கழக அறிவும் அளிக்கப்பெறாமல் அரசியல், ஊதியம் தேடிக் கொண்டு தொழிலர்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து வருகிறார்கள்.

பல்லடம் வட்டாரத்தில் பெரும்பான்மையான பகுதிகள் எப்போதும் வறட்சி நிலையில் இருப்பதால் பெரும்பான்மையான மக்கள் இந்தத் தொழிலையே கட்டாயமாகச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பல்லடம் வட்டாரத்தில் இந்த விசைத்தறித் தொழில் 40 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்டுப் படிப்படியாக வளர்ச்சி பெற்று, இப்போது பல்லடம் வட்டாரத்திலேயே முதன்மைத் தொழிலாக இருக்கிறது.

இடத்திற்கு இடம் வேறுபாடான கூலி

பல்லடம் வட்டாரத்திலேயே மூன்று முகாமையான பேரூர்களில் (பல்லடம், அதைச் சுற்றியுள்ள சிற்றூர்கள், திருப்பூர், அதைச்சுற்றியுள்ள சிற்றூர்கள், சோமனூர், அதைச் சுற்றியுள்ள சிற்றூர்கள்) ஒரே வகையான தொழிலுக்கு ஒரே அளவான உழைப்பிற்கு வெவ்வேறு அளவான ஏற்றத்தாழ்வான கூலி கொடுக்கப்பெறுகிறது. திருப்பூரும் அதைச் சுற்றிலும் உள்ள சிற்றூர்களிலும் கொடுக்கப்பெறுகின்ற கூலியைக் காட்டிலும் சோமனூரிலும் அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் கொடுக்கப் பெறுகின்ற கூலி குறைவாக உள்ளது.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

விசைத்தறித் தொழிலர்களின் நிலையைப் பஞ்சாலைத் தொழிலாளர்களின் நிலையுடன் ஒப்பிட்டுக் காண்க!

தமிழ்நாட்டில் உழவு தவிர்த்த, பெரும்பான்மையான மக்கள் செய்து வருகின்ற தொழில்கள் ஒரு சில. அத்தொழில்களில் முகாமையானது துணி உண்டாகித் தொழிலாகும். அத்துணி உண்டாகித் தொழிலில் பல பிரிவுகள் உள்ளன. அதில் உழவர்களிடமிருந்து பருத்தி உண்டாக்கம் செய்யப்பட்டுத், தரகு வணிகரால் அப்பருத்தி வாங்கப் பெறுவதிலிருந்து துணி உண்டாக்கத் தொழில் தொடங்கப் பெறுகிறது.

இதில் பஞ்சு வணிகரிடமிருந்து பஞ்சரைக்கும் ஆலைக்குப்பருத்தி கொண்டுசெல்லப்பட்டு நூலாக்கத் தகுந்ததாகப் பதனிடப்பட்டு நூற்பாலைக்கு அனுப்பப் பெறுகிறது. இந்நூற்பாலைத் தொழில் இந்நூற்றாண்டின்தொடக்கத்தில் தமிழகத்தில் ஆங்கிலேயர்களால் தொடங்கப்பெற்றது. இந்த நூற்பாலைத் தொழில் தொடங்கப் பெற்ற காலத்தில் (1905 வாக்கில்) நூற்பாலைத் தொழில் அடிமைப்படுத்தப் பட்ட தொழிலாளர்களைக் கொண்டிருந்தது.

அக் காலகட்டத்தில் நூற்பாலைத் தொழிலாளர்களின் இழிநிலைகளைக் கண்டு, மனம் வெதும்பிய தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் மிகத்துணிவாக நூற்பாலைத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஆசியாவிலேயே முதன் முதலாகத் தொழிற்கழகத்தை சென்னை பக்கிங்காம் கர்னாடிக் நூற்பாலையிலே நிறுவி, எந்த அரசியற்கட்சியையும் சாராமல், பெரும்பான்மையான உரிமைகளை ஈட்டித் தந்தார். இன்று நூற்பாலைத் தொழிலாளர்கள் மாதமொன்றுக்கு 900 உருபா முதல் 1500 உருபா வரை சம்பளம் பெறுகிறார்கள். இவை தவிர்த்துப் பிற உரிமைகள் வருமாறு.

1. நாளொன்றுக்கு 8 மணி நேர வேலை.
2. ஆண்டிற்கு ஒன்பது நாள்களுக்குச்சம்பளத்துடன் கூடிய விடுமுறை.
3. ஒரு தொழிலாளி ஓய்வு பெறும்போது அத்தொழிலாளி வேலை செய்த மொத்த ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒவ்வோர் ஆண்டிற்கும் 15 நாள் சம்பளப் பணிக் கொடையாக (கிராஜுவிட்டி) வழங்கப்பெறுகிறது.
4. வைப்புக் குவை (பிராவிடன் பண்ட்) ஏந்து செய்யப்பட்டுள்ளது.
5. ஒவ்வொரு தொழிலாளிக்கும் மருத்துவம் மற்றும் நோய்க்கால விடுப்பு, நோய்க்கால உதவித் தொகை- ஆகிய ஏந்துகளும் செய்யப் பெற்றுள்ளன.
6. தொழிலாளி ஒருவர் பணிக் காலத்தில் இறக்க நேர்ந்தால் 10,000 உருபா ஆலை நிறுவனத்தால் வழங்கப்பெறுகிறது.
7. ஆண்டிற்கு ஓய்வு விடுப்பாக 15 நாள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு அளிக்கப்பெறுகிறது.
8. ஊதியப் பங்குத் தொகை (Bonus)யாக ஆண்டு ஒன்றுக்கு 1000 உருபா முதல் 3500 உருபா வரை கொடுக்கப்படுகிறது.
9. ஒவ்வொரு தொழிலாளிக்கும் 58 அகவை வரை பணி நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற இன்னும் பற்பல ஏந்துகளும் நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு திரு.வி.க.வினால் அமைக்கப்பெற்ற தொழிற் கழகத்தால் பெற்றுத்தர முடிந்தது. ஆனால் நூற்பாலையிலிருந்து நூல் உண்டாக்கம் செய்யப்பட்டுத் துணி உண்டாக்கவருகிறது. தமிழ்நாட்டில் துணி உண்டாக்கம் மூன்று வகையாகச் செய்யப்படுகிறது. முதல்முறை தானியங்கித் தறி (Automatic Loom), இரண்டாம் முறை விசைத்தறி (Power Loom), மூன்றும் முறை கைத்தறி (HandLoom),

இதில் தானியங்குதறித் தொழிலாளர்களுக்கு நூற்பாலைத் தொழிலாளர்கள் போன்றே அனைத்து ஏந்துகளும் கிடைக்கப்பெறுகின்றன.

கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பல வகையாலும் மாநில மற்றும் நடுவண் அரசுகளும் உதவி வருகின்றன.

ஆனால், விசைத்தறித் தொழிலாளர்கள் நிலை மட்டும் மிகவும் இரங்கத்தக்க கீழ் நிலையிலுள்ளது; இத் தொழிலாளர்களுக்கு எவ்வகை உதவிகளும் மாநில அரசாலோ நடுவண் அரசாலோ செய்யப் பெறுவதில்லை.

—ஒரு விசைத்தறித் தொழிலாளி

பல்லடத்தில் ஒரு சிறப்புத் திருமணம்!

தி.பி. 2015,ஆடவை 25-ஆம் நாள் (9-7-1984) திங்கட்கிழமை காலை 6.15 மணியளவில் கோவை மாவட்டம் பல்லடம் குப்பண்ண (செட்டியா)ர் திருமண மண்டபத்தில் உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின் கோவை மாவட்டப் பொருளர் பல்லடம் திரு. மா. ஆறுமுகம் அவர்களின் மகள் செல்வி சுதா, திருப்பூர் திரு. மு. உலகநாதன் அவர்களின் மகன் செல்வன் முத்துரத்தினம் ஆகியோரின் திருமணம் இனிதே நிகழ்ந்தேறியது.

அன்று மாலை 3.00 மணியளவில் திருமண வாழ்த்துரை நிகழ்ச்சி இடம் பெற்றது. இவ் வாழ்த்துரை நிகழ்ச்சிக்கு உ.த.மு.க. முதன்மைக்குழு உறுப்பினர் தென்மொழி. ந. முத்துக்குமரனார் அவர்கள் தலைமையேற்றார்.

சிறப்பு வாழ்த்துரையாக ''இல்லறத்தின் கூறுகள்'' என்ற தலைப்பில் உலகத் தமிழினமுன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் உரையாற்ற வருகை தந்தனர்.

தலைமையேற்று வரவேற்புரை நிகழ்த்திய தென்மொழி ந. முத்துக்குமரனார் அவர்கள்,

திருமண நிகழ்வு முறைகளைப் பற்றியும், அவற்றில் பொதிந்துள்ள மூடத்தனங்களை நீக்க வேண்டிய தேவைகள் பற்றியும், தமிழர்தம் வாழ்வியல் நெறிகளுக்கு எதிரான போக்குகள் திணிக்கப் பட்ட நிலை பற்றியும் மக்கள் அவற்றைத் தெரிந்தோ தெரியாமலோ பின்பற்றி வருகின்றனரென்பதையும் விளக்கியுரைத்தார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையாற்ற வருகை தந்துள்ள பாவலரேறு அவர்களைப் பற்றியும் அவர் தொண்டு பற்றியும் விளக்கம் கூறி, ''இல்லறத்தின் கூறுகள்'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குமாறு வேண்டிக் கொண்டார்.

மணமக்களை வாழ்த்தியும் மணவிழாவிற்கு வருகை தந்தோர் மனங் கொளும் வகையிலும் வாழ்வியல் கூறுகளையும் வாழும் முறைகளையும் விளக்கிய பாவலரேறு அவர்கள்,

'அறம்' என்பதே வாழ்க்கை; அது மொழிபெயர்க்க முடியாதது; இயற்கைக்கு இணையாக வாழ்கின்ற மாந்தனின் ஒழுகலாறு. அஃது 'அன்பறம்' என்றும், 'அறிவறம்' அஃதாவது 'பொருளறம்' என்றும், 'இன்பவறம்' என்றும் முக்கூறுகளாகப் பகுக்கப் பெறும். இம்முக்கூறுபாடுகளும் இயைந்த நிலையே வாழ்க்கையாகும். இப்படி வாழ்க்கை இலக்கணம் வகுத்தவர் நம் திருவள்ளுவப் பேராசான். அவர் வகுத்த அவ் 'அறம்' என்னும் பேரியற்கூறு செப்பப்படுத்தப் பெற்றது; ஒரு வரையறைக்குட்படுத்தப் பெற்றது; சிறந்த ஒழுங்காக வகுக்கப் பெற்றது; தேர்ந்த நெறிமுறைகளைக் கொண்டதாகும். மனம், அறிவு, உடல் இம்மூன்றும் இயற்கைக்கு ஒத்த முறையில் இயங்குவது வாழ்க்கையாகும். மனவுணர்வு நம்மையறியாமல் நம்மைக் கட்டுவிக்கும் அன்பாகவும் - அறமாகவும், அறிவுணர்வு புறவுலகை ஆளுமை செய்யும்-ஒழுங்கு செய்யும் பொருளாகவும், ஒருவர்மீது ஒருவர் கொள்ளும் இணக்கவுணர்வு-ஒன்றோடு ஒன்று ஒடுங்கும் உடலியலுணர்வு இன்பமாகவும் இலங்கித் திகழ்கின்றன. இயற்கையுணர்வாக உயிர்களின் அடிப்படையாக அன்புணர்வு விளங்குகிறது. இல்லறம் ஏற்கும் இருவரும் உலகியல் உண்மைகளை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்; உலகத்தையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அதேபோல் மற்றவரும் இவர்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். வாழ்க்கைக்கு அடிப்படையாக விளக்கவியலாமற் பயில்வன அன்பும் அறிவும் பொருளுமாகும். ஒரு நல்விருந்துணவுப் படையலைப்போல் சிறப்பான ஒரு வாழ்க்கையில் எல்லாமும் நிறைந்திருத்தல் வேண்டும். ஆனால் நம் இல்லறச் சிறப்புகளைக் குடும்பத்தின் சுமையழுத்தங்கள், சாதிக் கட்டுப்பாடுகள், மதக்கட்டுப்பாடுகள், ஊர்க்கட்டுப்பாடுகள் குலைக்கின்றன. உரிமையுணர்ச்சிகளைத் தடுக்கின்றன.

ஒரே வகையுணர்வோடு-அன்புணர்வோடு கணவனும் மனைவியும் ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும். அவர்கள் ஒருவர்க்கொருவர் செலுத்துகின்ற 'அன்பு' கூடக் குறைவாக இருத்தல் கூடாது; மேலும் அது மகிழ்வைத் தருவதாக அமைதல் வேண்டும்.

அத்தகைய அன்பு இணக்கவுணர்ச்சியுடையதாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கும்; அது பெண்மையுள் நிறைந்து விளங்கும். அறிவு என்பது போட்டியை ஏற்படுத்துவதாகவும் சூடாகவும், ஆண்மையுள் நிறைந்தும் காணப்படும். இரண்டும் சமனிலையுடையதாக அமைதல் வேண்டும்.

பெண்ணிற்குச் சிறப்பாகக் கூறப்படும் ''கற்பு'' என்பது நெறிகளைக் காத்துக் கொள்ளுதல் என்றும், தாயின் வழியாகக் கற்பிக்கப்படும் ஒழுக்கமுறை என்றும் பொருள்படும். அவ்வொழுகலாறே அவர்க்குச் சிறப்பான அணிகலனாகும். மேலுக்கு அணியும் அணிமணிகளும் அவர்களை அடிமைப் படுத்தும் தளைகளாகும்; அவை ஆரியர் பெண்களை அடிப்படுத்த உருவாக்கிய காப்புகளாக-கழுத்து வளையமாக விளங்குவதைத் தமிழர் உணர்ந்து கொள்ளவில்லை. முன்னாளில் அவை இரும்பாலான குண்டலங்களாகவும் வளையங்களாகவும், கனமான 'சங்கலி'களாகவுமிருந்தன. அவை பின்னாளில் வெள்ளியாலும் பொன்னாலும் மனவியலுக்கு ஏற்ப படிநிலை வளர்ச்சி பெற்றன. பெண்களைக் காத்து அடிமைப் படுத்திவைக்கும் பழக்கம் ஆரியருடையது. தமிழர்கள் பெண்களுக்கு உரிமை வழங்கினர், இவற்றையே, 'சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை'' என்னும் குறளில் உணர்த்துகிறார் திருவள்ளுவர். தோற்றப் பொலிவாலும், சொற்றிறத்தாலும் கணவரைக் கவர்தல் வேண்டும். உள்ளத்தாலும் அறிவாலும் இயக்கத்தாலும் நடைமுறையாலும் அன்பு வைக்க வேண்டும். மனைவி என்பவள் உடல் தினவைத் தணித்துக் கொள்ள உதவும் ஓர் உருவமன்று; வாழ்க்கையின் கூறாகும்; இன்பத்துக்கு மட்டுமன்றி வாழ்க்கை மலர்ச்சிக்குத்துணைபுரியும் ஒருபாதியாகும்.

வாழ்வில் எக்காலத்தும் எவர் துணையும் இல்லாத விடத்தும் தன்னைக் காத்துக் கொள்ளும் திறமும், தன்னை மட்டுமே துணையாகக் கொள்ளும் கணவனைப் பேணிப் புரக்கும் உரமும், முக்காலத்தும் தன்மீது பிறர் கொள்ளும் தகுதி சான்ற நன் மொழிகளை அஃதாவது சொல், செயல், அன்பு, உழைப்பு வாழ்க்கையால் அவற்றைக் காத்து வைத்துக் கொள்ளும் பண்பும் உடையவளாய்ச் சோர்விலாதவளாக தாய்மைத் தலைவியாக மனைவி விளங்க வேண்டும்.

அத்தகைய மனைவியிடம் பெறும் காமம் மலரினும் மெல்லிதாகும். அக் காமம் மெய்யான உடலின்பமாகும்; அதுவே அருவருப்பற்றதும், உளவியல், உடலியல், பாலியல் சார்ந்து விளங்கும் உயர்ந்த கல்வியுமாகும். அதுவே பேரின்பமுமாகும், அவ்வின்பம் துறக்கவுலகத்தினும் மேம்பட்டதாகும் என்று திருக்குறள் கூறுகிறது. அத்தகைய, அறன் எனப்பட்ட இல்வாழ்க்கை இன்பத்தைப் பெற்றவன் புறத்தே போய் வேறு நலன்களை நாடிப்போக வேண்டுவதில்லை; இல்லறமே அனைத்து நலன்களுக்கும் உறைவிடம். துறவறம் கூட அதற்குப் பின்னதுதான். இல்லறத்தின் ஒருகூறு பொதுத் தொண்டு. இனி, வாழ்க்கை இறுதியிலோ மக்கள் பொது நலத் தொண்டுணர்வு மிக்கவர்களாகவே வாழ வேண்டும்.

இவையே இல்லறத்தின் கூறுகளாக விளங்குகின்றன என்று ஏறத்தாழ இரண்டுமணி நேரம் பாவலரேறு அவர்கள் உரையாற்றி முடித்தார்கள். இறுதியில் அன்பர்கள் சிலர் வாழ்த்துமடல் படித்தளித்த பின்னர், வாழ்த்துரை நிகழ்ச்சி இனிதே நிறைவெய்தியது. செய்தி. 'நெடியோன்'

கிழக்கு முகவையே கிளர்ந்தெழுக...!

உ.த.மு.க.வை வலுப்படுத்துக! முகவை மாவட்ட அமைப்பாளர் அறிக்கை!

தலைமை அழைப்பு, தடைகள் தகர்ப்பு;
நிலைமை மாற்ற எடுக்க பொறுப்பு!
உ.த.மு.க அமைப்பை உருவாக்க விழையும்
உணர்ச்சி வெள்ளம் பெருகிட வேண்டும்!

பொறுப்பு ஏற்ற தோழர்கள் மாவட்ட அமைப்புடன் ஒருமுறையேனும் தொடர்பு கொண்டால் நிலைமை தெரியும்! உறவு விரியும்!

இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் நகரம், இராமேசுவரம், கீழைக்கரை, பரமக்குடி வட்டம், நகரம், இளையான்குடி, கமுதி, காரைக்குடி, திருவாடானை, திருப்பத்தூர்,தேவகோட்டை,மானமதுரை, முதுகுளத்தூர், எல்லா வட்டங்களும் இருக்கின்றன! இவற்றில் 'தமிழ்நிலம்' புக வேண்டாமா? உ.த.மு.க உணர்வின ஊன்ற வேண்டுமன்றோ?

எங்கே எழுச்சி? தலைமை கேட்கிறது!

இளைஞர் படையை நம்பி ஏற்றுள்ள பொறுப்பை இனிதாக்க விரும்புகிறேன்! அமைப்பைக் கட்டமைக்க விரும்புவோர் இமைப்பளவும் சோராது தொடர்பு கொள்க! —பறம்பை அறிவன், உ.த.மு.க.
கிழக்கு முகவை மாவட்ட அமைப்பாளர்,
திருவள்ளுவர் நகர், பறம்புக்குடி.
முகவை மாவட்டம் 623707.

தனித்தமிழ் நாட்டை அமைப்போம்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல்லை இல்,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 41 (15-7-84) பகுதி 29-30

ஒரே உணர்வு! ஒரே போராட்டம்!

இன்றைய தமிழினத்திற்கு ஒட்டுமொத்தமான ஒரே ஓர் உணர்வுதான் தேவை. தமிழினத்திற்குச் சாதியுணர்வோ, மத-வுணர்வோ என்றுமே தேவையில்லை. அவ்வுணர்வுகள் கடந்த ஈராயிரமாண்டுக்காலமாக இவ்வினத்தை வேறுபிரித்தும், உட்பகை உண்டாக்கியும் தனக்குள் தானே போரிட்டுக் கொண்டு மடியும் படியுந்தாம் செய்திருக்கின்றன. அவ்வுணர்வுகளால் தமிழினத்திற்கோ, அல்லது தமிழ்மொழிக்கோ ஓர் எள்மூக்கத்துணை நலமாகிலும் ஏற்பட்டது என்று எவருமே சொல்லிவிடமுடியாது. எனவே சாதியுணர்வும் மதவுணர்வுகளும் என்றுமே தள்ளத்தகுந்த உணர்வுகளே ஆகும். தமிழினத்திற்கு மட்டுமன்று மாந்தப் பொதுநல உணர்வுக்கே இவை கேடு பயப்பன. இங்கு நாம் மதவுணர்வு என்று குறிப்பிடுவது தூய்மையான இறையுணர்வையன்று. இறையுணர்வு என்னும் பெயரால் உருவாக்கப்பட்ட புறப் பூசல்களே மதங்கள். நாம் குறிப்பிடுவன அப் பூசல்கள் சான்ற மதங்களையும் அவை தொடர்பான போலி உணர்வுகளையுமே!

இனி, தமிழினம் முன்னேறுவதற்கு ஏற்ற ஒரே உணர்வாகக் குறிப்பிட்டது எதை என்றால் அது தாய்மொழி சான்ற இனநலவுணர்வே. ஆம் அந்த இனநலவுணர்வுதான் இக்கால் தமிழினத்திற்கு மிக மிக முகாமைத் தேவை. அவன் இன்ன சாதியான், இன்ன மதத்தான் என்று பொதுமை மாந்த நலத்திற்கு எதிரான உணர்வைத் தமிழன் கனவிலும் மறந்துவிட வேண்டும். தமிழன்' என்னும் இனநலவுணர்வுதான்—அதுவும் அவனின் தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட உணர்வுதான், கடந்த மூவாயிர ஆண்டுகளாக வீழ்ந்து பட்டுக்கிடக்கும் அவனையும் அவன் இனத்தையும் அடியோடு மீட்டெடுக்க வல்லது. இன்னுஞ் சொன்னால் அவன் இனத்தை மட்டுமன்று, அவன் மொழியை, கலையை, பண்பாட்டை, அவன் நாட்டை மீண்டும் அவன் கையகத்தே கொண்டு வந்து சேர்க்கக் கூடிய வல்லமை சான்றது.

அடுத்தபடி. இத்தகைய இனநல உணர்வால் மேம்பட்டு விளங்க வேண்டிய அவனுக்கு ஒரே ஒரு கொள்கைப் போராட்டந்தான் உண்டு. அஃது அவன் தன் நாட்டுரிமைக்காகப் போராடுவதுதான். ஆம், தமிழனுக்கென்று இவ்வுலக உருண்டையில் ஒரு நாட்டைச் சமைத்தாக வேண்டும். அதற்கான காலகட்டம் வந்தாகி விட்டது. இக்கால்—இலங்கைத் தமிழர்க்காகத் தமிழீழப் போராட்டம் தொடங்கியாகி விட்டது. இன்றோ, நாளையோ, அல்லது நாளை மறுநாளோ அதன் வெற்றி உறுதி! கட்டாயம் உறுதி! அதை செயவர்த்தனுக்களோ இந்திராக்களோ தள்ளிவைக்கவோ, தவிர்க்கவோ இயலாது! இனி, இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழீழம் கிடைத்தாலும் போதாது! தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் தமிழ்நாடு கிடைத்தாக வேண்டும்.

எனவே, தனித் தமிழ்நாட்டுப் போராட்டமே அனைத்துத் தமிழர்களுக்கும் வேண்டுவதாகும். அதை விடுத்துக் கட்சி நலனை கருதியோ, பதவி நலன் விரும்பியோ, அல்லது தனித்தனிச் சாதி நலன்கள் வேண்டியோ, மற்றுக் கல்வி நலன்கள் கேட்டோ போராடுவது. வீட்டை முழுவதும் உரிமை கோராமல், வீட்டுக் கதவுக்கும், பலகணிக்கும், அடுப்புக்கும் போராடுவது போன்றதாகும். இந்நிலை தமிழ் மக்களை முற்றும் ஏமாற்றுவதாகும்! எதிர்காலத் தமிழினத்தை ஒட்டுமொத்தமாக அடிமைப்படுத்துவதாகும்! தமிழ்த்தாயை வாடகைக்கு விட்டுத் தின்பதற்கு ஒப்பானதாகும்!

ஆகவே, தமிழர்களை அறைகூவி அழைக்கின்றோம். தமிழ் நாட்டு விடுதலைக்காகப் பேசுங்கள்! பாடுங்கள்! உரையாடல் நிகழ்த்துங்கள்! பக்கம் பக்கமாக எழுதுங்கள்! அஞ்சாதீர்கள்! அயராதீர்கள்! தமிழ் மக்களிடம் போய் ஊர் ஊராகத் தெருத் தெருவாக, வீடு வீடாக எடுத்துச் சொல்லுங்கள். விடாதீர்கள்! வீணாக அடிமையாகிச் சாகாதீர்கள்! வெல்க தமிழ்நாடு! விலகுக அடிமைத்தனம்! 0

விளம்பரப் பலகை — தமிழ்ப்படுத்தம் மட்டும் அன்று — தூய தமிழ்ப்படுத்தம் ஆங்காங்கே முடுக்கப்படவேண்டும். கழக அன்பர்கள் கவனம் செலுத்துக!

திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

நாள் : தி.பி. ௨௦௧௫ கடகம் ௨௭, ௨௮ காரி ஞாயிறு (11-8-84, 12-8-84)

இடம் : நெல்லை மாவட்டம் ஏரல்

தலைவர் : **பர். க. ப. அறவாணன்** அவர்கள், சென்னை.

திறப்பாளர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார் சென்னை.

தமிழூர் அருளி

திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார்,

கலைநிகழ்ச்சிகள் :

(1) இரு வில்லிசைப் பாடல்கள்

(2) இரு நாடகங்கள்.

ஓவியர் அறவாழியின் மேவிய தொண்டு

உ. த. மு. க. அலுவலகம் தொடங்கிய பின், அதற்கு வேண்டிய முகவரிப் பலகை, கொள்கை விளக்கப் பலகை, இவற்றுடன் தென்மொழி விளம்பரப் பலகை ஆகியவற்றை எழுதுவதன் பொருட்டு, கடந்த 15-6-84 முதல் 27-6-84 முடிய 13 நாட்கள், உடுமலைப்பேட்டையிலிருந்து சென்னை வந்து தங்கியிருந்து, இரவு பகல், உண்ணும் உறங்கும் நேரம் போக, நாளொன்றுக்கு ஏறத்தாழ 18 மணி நேரம் பணியாற்றிய பெறற்கரிய கொள்கைக் குன்றம், அரும்பெருந் தொண்டர் ஓவியர் அறவாழி அவர்களின் அன்புணர்வையும், கொள்கை உணர்வையும் மனமகிழப் பாராட்டுவதுடன், அவரின் தொண்டுள்ளத்திற்குக் கழகம் தன் நன்றியுணர்வை இதன்வழித் தெரிவித்துக் கொள்கிறது.

முதல்வர்.
உ.த.மு.க.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு— காலத்தாழ்த்தம்

உ.த.மு.க. அலுவலக அமைப்பின் பொருட்டும், கழகக் கிளைகள் சீர்மைகள் குறித்த நடவடிக்கைகளாலும் இடையிடை நேர்ந்த ஆசிரியரின் வெளியூர்ச் செலவுகளாலும் தென்மொழி சு. 20 ஓ. 9-10, தமிழ்ச்சிட்டு கு. 16 இ. 1-2 ஆகிய இதழ்கள் காலத்தாழ்த்தமாக வெளிவரவிருக்கின்றன. அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

அமைச்சர்,
தென்மொழி, தமிழ்ச்சிட்டு

உலக வானொலிகளில் தமிழ் ஒலிபரப்பு!

ஒலிபரப்பு நிலையங்கள்	சிற்றலை வரிசையெண்	நேரம் முதல்-வரை	ஒலிபரப்பும் நாள்கள்
(1) பி.பி.சி. தமிழோசை	16,25,41,49	இரவு 9-45 — 10-15	செவ்,வியா, காரி,ஞாயிறு
(2) வெரித்தாசு தமிழ்ப்பணி	16,19 19,25.31	காலை 7—7-30 இரவு 7-30-8—00	நாள்தோறும்
(3) மாசுக்கோ-வானொலி	13,19 25 16,19,	மாலை 6-00 – 6-30 இரவு 7 30 – 8-00	,,
(4) பீக்கிங்-வானொலி	25,31 25,31	காலை 7-30 — 8-30 இரவு 8-00 – 8-30	,,
(5) பாக்கித்தான் வானொலி	19,25	பிற்பகல் 2-30 3-15	,,
(6) தூரகிழக்கு ஒலிபரப்பு நிலையம் (FABA)	49 25	காலை 6-30 – 7-15 மாலை 6-45 — 7-45	,,
(7) Transworld Radio (TWR)	31	இரவு 8.00 – 8-30	,,
(8) வத்திகான் வானொலி	16,25	இரவு 8-45 — 8-55	வியாழன்
(9) மலேசியா	60	மாலை 8-00 – 9-00	நாள்தோறும்
(10) சிங்கப்பூர்	41,49	மாலை 6-00 — 7-00	,,

— 'சச்சி' — ஈழ நாடு 11-3-84

தமிழ்த்தேசியப் பொதுவுடைமை சமைப்போம்!

தமிழகம் மீளுமா?

— புலவர். அறிவுடைநம்பி

தலைப்பைப் பார்த்தவுடன் சிலர் வியப்படையலாம், வேறு சிலர் எரிச்சலடையலாம்; இன்னும் சிலரோ பித்தனின் உளறல் எனப் பகடிபேசலாம். யார் எப்படிப் பேசினாலும்; தமிழகம் என்னவோ இன்று மிக நெருக்கடியான காலக்கட்டத்தில்தான் இருக்கிறது. கழகக் காலத்திற்குப் பிறகு, ஓர் இருண்டகாலம் என்று வரலாற்றில் குறிக்கின்றனரே அத்தகைய ஒரு நிலை இன்று நிலவுகிறது. தமிழ்நாட்டில் இன்று தமிழர்தாம் வாழ்கிறார்களா, என்ற ஐயம் ஏற்படும் அளவிற்கு நிலைமை தாழ்வடைந்திருக்கிறது. ஆனால் எத்தனைப்பேர் இதை உணர்ந்து அந்நிலை அகல, அல்லது அகற்ற முயல்கின்றனர்? எங்கு நோக்கினும் எவரை நோக்கினும் ஏமாற்றமே. அதுமட்டுமன்று, இல்பான மாந்தப் பண்புகளாவது நடைமுறையில் இருக்கின்றனவா? ஐயகோ! அதை எவ்வாறு இயம்புவது! "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என வாழ்ந்த, "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியாகிய தமிழனின் தாழ்ந்த நிலை!

நாட்டைப் பற்றியோ, நாட்டு மக்களைப் பற்றியோ மக்கட் பண்பாட்டைப் பற்றியோ, அறவுணர்வுகளைப் பற்றியோ, எவரும் எண்ணிப் பார்ப்பதாகக் கூடக் காணோம். எங்கோ அங்கொருவர், இங்கொருவர், அவ்வழிந்து படுகின்ற பண்புகளுக்காக, இனமீட்சிக்காக உழைக்க முன்வந்தாலும், அவர்களைப் பற்றி மக்கள் எண்ணிப் பார்க்கவோ, அல்லது கைகொடுத்து உதவவோ முன்வருவதாகவும் காணோம். எல்லா இடத்திலும், எல்லார் இடத்திலும் தந்நலமே மேலோங்கி நிற்கக் காண்கிறோம். எந்த ஒரு நிலையிலும் போட்டி பொறாமை, இரண்டகச்செயல்கள் ஆகியனவே மேம்பட்டு விளங்குவதைக் காண்கிறோம். எளியவனை வலியவன் வாட்டுவதே அறம் என்ற நிலை தோன்றிவிட்டது. வல்லான் வகுத்ததே வாழ்க்கை அறமாய் விட்டது.

எங்குப் பார்த்தாலும் உரிமை முழக்கம் வலுவாகக் கேட்கிறது. ஆனால் கடமை என்று ஒன்று இருப்பதையே பெரும்பாலோர் மறந்துவிட்டனர். யாரைப் பழிப்பது யாரைப் பாராட்டுவது என்பனவெல்லாம் தலை கீழாக மாறிவிட்டன. ஒருவன் எந்த அளவிற்குக் குமுகாயத்தைச் சுரண்டுகின்றானோ, குமுகாய நெறிகளை மீறுகிறானோ, பண்பாட்டிற்குப் பொருத்த மற்ற செயல்களைச் செய்கிறானோ அந்த அளவிற்கு அவன் மதிக்கப்படத்தக்கவன் ஆகிறான் இன்று.

முறைதவறிய வல்லாண்மையே மேலோங்கி நிற்கிறது. உண்மையிலேயே நாட்டு நலன், குமுக நலன் கருதவோர் ஒதுக்கப்படுகின்றனர், அல்லது ஒடுக்கப்படுகின்றனர். பொய்ம்மையையே வாழ்வாகக் கொண்டவர்கள் இன்று தெய்வமாக்கப்பட்டுள்ளனர். நாட்டின் வளர்ச்சி பற்றிய கணக்கை மறந்து தனது வளர்ச்சியையே எண்ணிக் கணக்கிடுவோர் கண்கண்ட தெய்வம் இன்று. சொல்லுக்கும் செயலுக்கும் எந்தத் தொடர்புமின்றி வாழ்வோர் மாபெரும் தலைவர்கள்.

இன்றைய மாந்தன் மேலான பண்பாடாகக் காண்பது மதுவைக் குடித்துவிட்டு மாண்பைக் கொல்லுவது. மற்றவர்களுக்கு அறிவுரை கூறலாம், ஆனால் அதை நாம் கைக்கொள்ளத் தேவையில்லை என்போரே அறவோர்கள் இன்று. நாட்டு மக்களின் அறியாமையைப் போக்க, வறுமையைப் போக்க வழியில்லை. கூட்டங்களுக்கும் கலை விழாக்களுக்கும் குறைவில்லை. பசியால் வாடும் ஏழைகளைப் பற்றி எண்ணிப்பார்க்க யாரும் இல்லை. ஆனால், கோயில்களில் வழிபாடு நடைபெறவில்லையே எனப் பெரிய கூப்பாடு, அதனால் இந்த மாந்த இனத்திற்கே பெரிய கேடு வந்து விட்டது போன்ற சொற்போர்கள்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது பழமொழி. அதுபோல் இன்று தமிழகத்தில் உள்ள கட்சிகளுக்கிடையே தோன்றி உள்ள காழ்ப்புணர்வுகளால் நடுவில் இருப்பவர்கள் தங்கள் கொள்கைகளைத் திணிக்கிறார்கள். தமிழர், மொழி, பண்பாடு, நாகரீகம் ஆகியனவற்றை அழிக்கவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். நாட்டு முன்னேற்றத்திற்குப் போட்டி போடுவது போய் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்வதிலும், காட்டிக் கொடுப்பதிலும் போட்டி வலிமையாக நடைபெறுகிறது.

"அறம்பொருத பொன்போலத் தேயும்
உரம்பொருது
உட்பகை யுற்ற குடி.

என்பது வள்ளுவர் வாய்மொழி, அந்த உட்பகை காரணியமாகக், கேள்போல் பகைவர்களால் தமிழகம் தவிக்கிறது; தன்னலப் பேய் தலை விரித்தாடுகிறது.

இத்தகைய இழிநிலையில் வீழ்ந்துகிடக்கின்ற தமிழகம் தலை நிமிர வேண்டுமானால், இன்றைய இழிவுகள் அகற்றப்படவேண்டுமானால், குமுகாயத்தில் பெரிய மாற்றம் நிகழ்ந்தாலன்றி இயலாது. அப்படி மாற்றம் ஏற்பட தன்னலத்திலும், கயமைத்தனத்திலும் ஊறிப்போன, பெரியவர்கள் முன்வருவார்களா? முன்வருபவர்களுக்கு வழி விடுவார்களா? அவற்றையும் மீறிப் பொதுநலனில் முனைப்புடன் உழைக்க விரும்புவோர் எவராவது முன்வந்தாலும், வரண்டுபோன உள்ளங்களையும் கோணல் நிறைந்த அறிவையும் பெற்று, 'எல்லாம் அவன் செயல்' என்ற மூடத்தனத்திலும் மூழ்கிக்கிடக்கும் மக்கள் ஆதரவு தருவார்களா? சாயப்பூச்சிற்கும், பொடிப்பூச்சிற்கும், வெற்றுப்பேச்சிற்கும் மயங்கி ஆட்டுமந்தைகளாய் அலையும் மக்கள் உண்மையுணர்வு பெற்று, உரிமை பெற எழுவார்களா?

இவையெல்லாம் எண்ணும்போதுதான் தமிழகம் மீளுமா என்ற ஐயம் உண்டாகிறது. வடவர் திட்டமிட்டுப் பல வழிகளிலும் மொழி, இனக்கொலையைச் செய்துகொண்டே வருகின்றனர். ஆனால் இங்குள்ளோர் ஒன்றுபட்டு அக் கேடுகளை எதிர்ப்பதற்குப் பகரமாக, இன உணர்வற்றுத் தமிழனே தமிழனை அழிக்கவும் காட்டிக் கொடுக்கவும், இரண்டகம் செய்யவும் முனைப்புடன் செயல்படுகின்றனரே! என்ன கொடுமை! தமிழினம் இவ்வளவுகாலமாகக் கண்டுவந்த தாக்கங்களைவிட இப்போதைய, இப்போது தோன்றியுள்ள அகப்பகையாகிய தாக்கம் கொடுமையானது, தமிழனை அழிவு நிலைக்கு விரைந்து தள்ளி வருகிறது.

உலகவரலாற்றில் வேற்று மொழியால் தனது தாய்மொழி தாக்கப்படுவதை, அழிக்கப்படுவதை அறிந்து, உணர்வு பெற்று அம்மொழிக்குரிய மக்கள் வேற்று மொழியின் பிடியிலிருந்து தம் மொழியை மீட்டெடுத்த வரலாறுகள் ஏராளம்! வேற்றினத்தின் அடிமையிலிருந்து போராடி விடுதலை பெற்றுப் புகழ் பெற்ற இனவரலாறுகள் ஏராளம்! ஆனால், தனது தாய்மொழிக்குக் கேடு செய்யவும், இழிவுபடுத்தவும், அதன் வளர்ச்சிக்குத் தடையாகவும் அம் மொழிக்குரியவனே இருப்பதும் ஏதோ சில எந்துகளுக்காகத் தனது இனத்தையே மாற்றானுக்குக் காட்டிக் கொடுப்பதும், இன இரண்டகம் செய்வதும், சுருங்கச் சொன்னால் கோடாரிக் காம்பாகச் செயல்படுவதும் தமிழினத்தைத் தவிர வேறு இருக்க இயலாது. எனவேதான் கேட்கிறேன். வயிற்றுப் பாட்டையே பெரிதாக எண்ணும் சோற்றுத்தமிழனே! வீறு கொண்டு எழப்போகிறாயா? சோற்றையே பார்த்து அழியப்போகிறாய? பழம் பெருமை மீட்கப்போகிறாயா? பணத்திற்காக நத்திப் பழிகாரனாகப் போகிறாயா? தாய்த் தமிழகத்தை எடுத்து நிறுத்தப் போகிறாயா? மாற்றான் காலில் போட்டு விட்டு மடியப் போகிறாயா? சிந்தித்துச் செயல்படுவாயாக!

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் குடியமர்த்தல்

சிறிமாவோ — சாத்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் குடியமர்த்தலில். குடியமர்த்தப்பட்டுள்ள 91 ஆயிரம் குடும்பங்களில் 86 ஆயிரத்து 200 குடும்பங்கள் தமிழகத்திலேயும்; 4 ஆயிரத்து 800 குடும்பங்கள் மட்டும் பிற மாநிலங்களிலும் குடியமர்த்தப் பட்டிருப்பதாகச் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா, அந்தமான் ஆகிய பிற மாநிலங்களிலேயே குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். ஆந்திர மாநிலத்தில் மட்டுமே 2200 குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

0

நன்றி-செய்தி- — 'மக்கள் மறுவாழ்வு' சூலை'84

தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமை..?

"எநத அளவு நிறைய படித்தாலும், சிறிதளவே நாம் மார்க்கிய-இலெனினியத்தைப் படித்தது போன்றாகுமாறு அததுறைகள் ஆழ அகன்றன. எனினும மார்க்கிய இலெனினியம் மட்டும் நிறைவானதொரு புரட்சியை உருவாக்கி விடாது. நாம் சீனநாட்டின் சிக்கல்களையும் ஆழ்ந்து படிக்க வேண்டும். இந்நாட்டின் (சீனத்தின்) தொடக்க மாந்த நிலையினின்று வரலாற்று உண்மைகள் அனைத்தையும் முழுக்கப் படித்தாக வேண்டும். என்னையும் உள்ளடக்கி எந்தச் சீனனும் இன்னும் சீனச் சிக்கலைச் சரிவரப் புரிந்து கொளளவில்லை. இச்சீன ஆளுமை அதிகாரத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதை அனைவரும் தெரிந்து வைத்திருக்கிறோம்; ஆனால் அப் போராட்டத்தை எப்படி நடத்திச் செல்வது என்பதை யாரும் தெரிந்து கொள்ளவில்லை" — "மாசேதுங் தாள்கள்", பக்கம் 22

உலகமும் உரிமை எழுச்சிகளும்

— இரும்பிடர்த்தலையார் —

சென்ற ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையையும் அதன்பின் நடந்த, நடக்கின்ற நிகழ்ச்சிகளையும் நாம் நன்கு அறிவோம்.

ஆண்டாண்டுக் காலமாய் ஒற்றுமையாய் வாழ்ந்த இரு பேரினங்கள் தமக்குள் இகல் கொண்டு ஓரினம் மற்றோர் இனத்தைப் படுகொலை செய்ததை உலகமே கண்டது.

உலகம் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் மாற்றங்கள். பல இனங்கள் ஒற்றுமையாய், வேறுபாடுகளின்றி வாழ்ந்த காலம் மறைந்து பிளவுகள் பெருகி வருகின்ற காலம் ஆயிற்று.

ஈழத்தில் மட்டும் இது புதுமையான ஒரு செயலன்று, உலகம் முழுவதும் இந்த இனப் பிளவுகள் மலிந்துவிட்டன. ஒவ்வோர் இனமும் தன் இன உரிமைக்காக, முன்னேற்றத்திற்காக உரிமைக் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டது. உலகில் எழுந்துள்ள இன எழுச்சிகள் சிலவற்றைக் காண்போம்.

செருமனி

இன எழுச்சிக்கு வித்திட்ட நாடு என்று செருமனியையும் அதற்கு வழிகாட்டியாக இட்லரையும் கொள்ளலாம். செருமானிய இனமே ஆளப்பிறந்த இனம் என்று அவர் எழுப்பிவிட்ட இன உணர்ச்சி செருமனியைக் கிளர்ந்து எழச் செய்தது. இன்று உலகையே கௌவிக்கொண்டது.

அயர்லாந்து

அயர்லாந்துபெரியபிரிட்டனில் (Great Britain) ஒரு பகுதியாக இருந்துவருகிறது. அயர்லாந்து மக்கள் தங்கள் நாடு தனி நாடு ஆக வேண்டும் என்று பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். அயர்லாந்து புரட்சிப்படை அதற்காகப் போராடி வருகின்றது.

ஆனால் ஆங்கில அரசு சிங்கள அரசைப்போல அரக்கத்தனமான செயல்களைச் செய்யவில்லை. ஆங்கிலேயர்கள் சிங்களர்கள் அல்லர்.

சைப்பிரசு

நடுத்தரைக் கடலிலுள்ள சிறிய ஒரு தீவு சைப்பிரசு. அங்கே கிரேக்கர்களும் துருக்கியர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து நாட்டை வளப்படுத்தினர். ஆனால் இன்று, 'இனிமேல் இணைந்து வாழ முடியாது' என்ற முடிவில் அவ்விரு இனங்களும் பிரிந்துவிட்டன.

துருக்கியர் தனியாட்சி அமைத்துக்கொண்டதாக ஒருதலையாக அறிவித்துவிட்டார்கள். உலகம் அதனை மறுக்கமுடியவில்லை.

இலெபனான்

நடுத்தரைக் கடலின் கிழக்குக் கரையிலுள்ள ஒரு சிறிய நாடு இலெபனான் இசுலாமியரும், கிறித்தவர்களும் இணைந்து வாழ்ந்தனர் அத்திரு நாட்டில். மனக்கசப்புக்கு இடமின்றி அதிகாரங்களையும் பதவிகளையும் பகிர்ந்துகொண்டனர். இன்று நிலைமை அடியோடு மாறிவிட்டது. இரு இனத்தவரும் தமக்கெனத் தனித்தனிப் படைகளை அமைத்துக்கொண்டு போரிடுகின்றனர். அரசின் படையால் அவ்வெழுச்சிப் படைகளை அடக்கவோ அழிக்கவோ முடியவில்லை. இலெபனானுக்கு மட்டுமன்று, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சுக்கு மட்டுமன்று உலகம் முழுவதற்குமே இன்று பெரிய தலைவலியாக இருப்பது இலெபனான்.

வேறு எந்தத் தீர்வின் மூலமும் தீர்த்துவிட முடியாதபடி மிகச் சிக்கலாயிற்று இலெபனான் சிக்கல்.

இசுலாமிய இலெபனான், கிறித்தவ இலெபனான் என்று நாட்டை இரு பிரிவுகளாகப் பிரிப்பது ஒன்றே வழி. அவ்வழிதான் நாட்டில் அமைதியை நிலைநாட்டும்; மக்களிடையே மேலும் மேலும் மனக்கசப்பும் ஆழ்ந்த வெறுப்புணர்ச்சியும் பகையும் உருவாகாமல் நாட்டையும் ஒன்றுமறியா மக்களையும் காப்பாற்றும்.

ஈரான் — ஈராக்

ஈரானும் ஈராக்கும் கடந்த நான்கு ஆண்டுகளாகப் போரிட்டு வருவதை நாம் அறிவோம். அப்போருக்கு அந்நாடுகள் என்னென்ன காரணங்களைக் கூறிக்கொண்டாலும், இசுலாமியப் பிரிவுகளாக சியா — சுன்னி என்னும் இரண்டு இனங்களுக்கு இடையே ஏற்பட்ட இகலே அடிப்படையான உண்மையான காரணம் என்பது மறுக்க முடியாதது.

ஈழம்

தமிழர் — சிங்களவர் இனப்பிரிவே ஈழச்சிக்கலுக்கு அடிப்படை. இந்த இரண்டு இனங்களும் இனி இணைந்து வாழமுடியாது என்ற நிலைக்கு தமிழர் தள்ளப்பட்டுவிட்டனர்.

இன்று அல்லது நாளை நாடு பிரிவது ஒன்றைத் தவிர வேறு முடிவு இராது.

0

உழவரும், தொழிலரும் ஒன்றுபடுக!

தொடர் : 2 : — சென்ற இதழ்த் தொடர்ச்சி

உலகத் தமிழின முன்னேற்றக் கழகக்

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

— நிகழ்ச்சிச் சுருக்கம் —

மே-24-அன்று மாலை 6.30 மணிக்குக் கலந்துரையாடல் தொடங்க இருந்ததால் அகம் கழுவப்பெற்ற அனைத்துரவோர்களும் முகம் கழுவி வந்தமர்ந்தனர்.

அன்று மாலை கலந்துரையாடலின் பொழுது கழக முதல்வர் ஐயா அவர்கள் பயிற்சியாளர் எவருக்கேனும் கடந்த வகுப்பினுல் பெற்ற கருத்துகளில் ஐயப்பாடுகள் இருப்பின் வினவலாம் எனக் கூற ஏறத்தாழ பன்னிரண்டு வினுக்களை திரு. தமிழ்மாறன், திரு. ஈகவரசன், திரு. முருகவேள், திரு. இனநலவேந்தன், திரு. மகிழ்நன், திரு. சுப்பிரமணியன், திரு. தென்னவன்கோ ஆகியோருடன் கழகத் தொண்டர்கள் சிலரும் எழுப்பினர் :

1: பாரதிதாசனுர் தனித்தமிழ்ப் பற்றுவராய் இருந்தபொழுதிலும் தம் மக்களுக்கு வடமொழிப் பெயர்களே சூட்டியுள்ளாரே ஏன்?

2. தமிழை எல்லாரும் செந்தமிழ் எனக்கூற பாவேந்தர் மட்டும் ஏன் கருந்தமிழ் எனக் குறிப்பிடுகிறுர்?

3. புலவர். அதியமான் குறிப்பிட்ட இரு கருத்துகளில் இரண்டாம் கருத்தான சிற்றூர்ப்புறக் கலைகள் வழி கொள்கைகளைப் பரப்ப முடியுமா? அது பிறகட்சிகள் போலும் ஆகிவிடாதா ?

4. கருத்து என்ருல் என்ன? பிறமொழிச் சொல் திணிப்பு எப்படிக் கருத்தை மாற்றும்?

5. பொருநராற்றுப்படை, புறநானூறு முதலிய இலக்கியங்கள் புரட்சியைப் பற்றியே கூறுதபொழுது ஏன் அவற்றைப் படிக்கவேண்டும்?

6. பாவேந்தர் பற்றிப் பேசிய புலவர், தேசிய ஒற்றுமைபற்றிய கூட்டத்தில் கலந்து கொள்கிறுரே அது தொடர்பாக...?

7. தனித்தமிழ் நாடு பெற்றபின் ஏழை — பணக்காரப் போராட்டம் இல்லாமல் இருக்காது. ஆகையால் குறைந்தது 15 ஆண்டுகளுக்கேனும் பொதுவுடைமை தமிழ்நாட்டில் விதைக்கப்பெற வேண்டும்- தங்கள் கருத்து என்ன ?

8. தமிழர்கள் வெளிநாடுகளில் சென்று இன்னல், துன்பம் படும்பொழுது ஏன் வேற்றினத்தினரான கன்னடியர், தெலுங்கர், மலையாளியர் தொல்லைப் படுவதில்லை?

9. தாங்கள் ஐரோப்பிய நாடு சென்று வந்தபின் நான்கு வீடுகள் வாங்கிவிட்டதாகக் கூறிக் கொள்கிறுர்கள்; அவர்களையெல்லாம் என்ன செய்வது?

10. தென்மொழி வெளியிட்டிருந்த பேரா(சையா)சிரியர் உண்மைவழி மன்னிப்பு கேட்கவில்லை, சூழல் அந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. நாம் அவரை மன்னிப்புக் கேட்கும்படி என்ன செய்ய வேண்டும் ?

11 காலையில் திரு. இரணியன் பேசுகையில் பாவலரேறு அவர்களின் வீடுகளின்மூக்குகளில் நடப்பதெல்லாம் எனக்குத் தெரியும் என்ருரே அவரை ஏன் அமைதியாக விட்டீர்கள்?

— மேலுள்ளவாறு எழுப்பப்பட்ட வினுக்களுக்குக் கழக முதல்வர் ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் மிக அமைதியாகவும், பொறுமையாகவும் உண்மைகளை விளக்கிக் கூறினுர். தம் தனி வாழ்வை யொட்டிக் கேட்கப் பெற்ற கடைசி இரண்டு மூன்று வினுக்களுக்கு ஐயா விடை கூறுகையில் எமக்குத் தனிவாழ்வு என்ருே பொதுவாழ்வு என்ருே ஒன்றில்லை. நான் முழுக்க இவ்வினத்தின் தொண்டன்; அதற்கெனத் தன்னை ஒப்புவித்துக் கொண்டேன் என்றும் எப்படிப்பட்ட பழி, இழிவுகளை என்மீது தூற்றினுலும் நான் கவலுறேன். நான் அவற்றை இல்லை என்று எப்படி ஒவ்வொன்றையும் மறுத்துக் கொண்டு திரிவது! என்னை முழுக்க உணர்ந்தார் அனைவர்க்கும் என்னிலை புரியும். அந்நிலையில் இவற்றையே பேசி என் பொது வாழ்வு நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை என்று மிகப் பொறுமையாக விடை கூறிய பாங்கு கண்ணீர் செகுக்கக்கூடியதாக அமைந்தது. இரவு 9.30 மணியளவிற்கு ஐயா உரைகூறி முடித்த பின்பு அனைவரும் உணவு உண்டு விட்டு உறங்கச் சென்றனர்.

ஐந்தாம் நாளாக அணைப்பட்டியில் விடிந்த பொழுது மகிழ்வொடு, உரத்தொடு, பயனொடு அமைந்தது. அன்றைய வகுப்பு அணைக்குக் கிழக்குப் புறத்தில் ஆற்று மணல் சரிவில் பறந்து உயர்ந்த புளியமரங்களின் கீழ் நடந்தது.

தமிழ்த்தாய் வாழ்த்தைத் தமிழ்நெஞ்சன் பாட வகுப்பு தொடங்கப் பெற்றது. குமுகாய ஏற்றத்தாழ்வு சீராமைக்க நாம் ஒன்றெனத்திரண்டு பாடுபட வேண்டும் அதற்கு இப்பயிற்சி வகுப்பு முதற்படியாக அமைய வேண்டுமெனக் கூறி அனைவரையும் ஓடைவை. ந. தமிழ்வேந்தன் வரவேற்ருர். அன்றைய வகுப்பிற்கு திரு. வேலவன் தலைமைப் பொறுப் பேற்ருர். திராவிட இபக்க வரலாற்றை குறுகத் தரித்துச் செவ்வனே முன்னுரை போல் வழங்கினுர்.

'பெரியார் இனவியற் கொள்கை' எனுந் தலைப்பின் கீழ் வகுப்பு எடுத்து திரு. குமர-தன்ஞெளியன் அவர்கள பொருளியல் நிலையில் உயர்ந்து நின்ற பெரியார் அவர்கள் அடிநிலைத் தொண்டுணர்வு கொண்டு இவ்வின மேம்பாட்டிற்காக உழைத்த உழைப்பு அரிதினும் அரிது. மக்களைச் சிந்திக்கக் கூறுவது குற்றமாகப் போய்விட்டது உலகில். சாக்ரடீசு சிந்திக்கக் கூறியதனுல் நஞ்சு கொடுக்கப் பெற்றுக் கொல்லப்பட்டார்; தந்தை பெரியாரும் துன்புறுத்தப் பெற்ருர் — என்று பலபட அவர் தொண்டினைப் புகழ்ந்து, வியந்து எடுத்துரைத்து ஒரு மணிநேர அளவிற்கு வகுப்பெடுத்து முடித்தார.

பத்து நிமைய இடைவெளிக்குப்பின்னர் வகுப்பு சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளி அவர்களால் எடுக்கப்பெற்றது "வேர்ச்சொல் விரியும் வகை" எனும் தலைப்பின்கீழ் மிகு விரிவாக ஏறத்தாழ இரண்டு மணிநேர அளவிற்கு அரியதொரு விளக்கத்தை அளித்தார்கள்.

"திருவள்ளுவர் பிறந்து ஈராயிரம் ஆண்டுகள் சென்றன" எனும் பாவலரேறு அவர்களின அரிய தமிழினத்தை எண்ணி, உருகிப்பாடிய பாடலைப் பாடி அனைவர்தம் உள்ளத்தையும் தட்டி எழுப்பிப் பின் தம் சொல்லாய்வை எடுத்துரைத்தார்.

ஏறத்தாழ எட்டு இலக்கம் சொற்கள் உருப்பெற்ற ஆங்கில மொழியில் ஐந்திலக்கம் சொற்களே ஆக்சுபோர்டு அகரமுதலியில் இடம் பெற்றுள்ளதாயினும் அவற்றுள் 5 முதல் 8 விழுக்காட்டுச் சொற்களே சமற்கிருத மூலமுடையனவும் எஞ்சிய அனைத்தும் திராவிடமொழி மூலத்தினின்று பிரிந்தனவே என்றும் விளக்கமுறக் கூறிவிட்டு கம்பம், மண்டிலம் என்ற இரு சொற்களுக்கு மூலம் காட்டி அதன் போங்கு நிலையில் உள்ள ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களை எடுத்து இயம்புகையில் உறங்கிக் கிடந்த உள்ளுணர்வுகள் புடைத்து எழுந்து நின்றன. நம் அருந்தமிழ் மொழியின் முடக்கு நிலையை மீட்க இன்றே போராட வேண்டுமென உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்றுமளவு அவ் விளக்கம் அமைந்தது.'கும்' —எனும் வேரடியிலிருந்து கம்பம் வளர்ந்த நிலையையும், முள்-எனும் வேரடியினின்று மண்டிலம் பிறந்த நிலையையும் விளக்கிக் காட்டி விட்டு அதன் பிறழ்ச்சி நிலைகள் எந்த அளவில் பிற ஐரோப்பிய மொழிகளில் பரவியுள்ளன என்றும் விளக்கினுர். இறுதியாக பல்லடம் வேலுச்சாமி நன்றியுரை கூற காலை வகுப்பு நிகழ்ச்சி முழு மன நிறைவொடு முடிந்தது.

அன்று பகல் உணவிற்குப் பின்னர் உரவோர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து ஏறத்தாழ 3.30 மணியளவிற்குக் கொடியேந்தியபடி ஊர்வலம் ஒன்றை அமைத்துக் கொண்டு அருகில் உள்ள சித்தர் குன்றம் சென்றனர். வழி நெடுகில் ஊர்ப்புறத்தில் உள்ள சிற்றூர் மக்களுக்கு சென்னை மாவட்டம் வெளியிட்டிருந்த அறிக்கைகளைப் பரப்பிய வண்ணமும், கொள்கைப் பாடல்களை, உரக்க பாடிக்கொண்டும் சென்ற நிலையும் உணர்வு கொள்ளத்தக்கன.

ஏறத்தாழ ஆயிரம் அடி உயரம் உள்ள அந்த சித்தர் குன்றம், அப் பகுதியில் மிக உயர்ந்தது.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை எங்கே செல்கிறது?

சிரிலங்காவின் தலைவர் செயவர்த்தன தம் நாட்டில் கொடுமைநிலையை எதிர்த்துப் போரிடப் போகிறுராம். அதற்காக அவர் பேயி (சைத்தா) னிடமிருந்தும் உதவிப்பெற அணியமாகிவிட்டார். இசுரேலியக் கமுக்கத் துறையான மொசாத்தின் ஆதரவை அவர் கோரிப் பெற்றுள்ளார்.

அனைத்துலக அரங்கில், கொடுமைப்போக்கினையே அரசுக் கொள்கையாக உயர்த்தியுள்ள நாடு இசுரேல். அந்த நாட்டிடம் போய்க் கொடுமைப் போக்கை எதிர்ப்பதற்கு உதவி கேட்பது பகடிக்குரிய செய்தி மட்டுமன்று; மிகக் கொடுமையானதும். இசுரேல் நாட்டின் அதிகார முழுமையான கோட்பாடு யூத இனவெறியே! அது தன் நோக்கங்களை அடைவதற்கு முகாமையாகக் கடைப்பிடிக்கும் வழி கொடுமைக்கோட்பாடாகும். அதனைச் செயல்படுத்தும் ஊழியர்கள்தாம் 'மொசாத்' என்ற அமைப்பில் இயங்கும் கமுக்கப் படையினர். இந்த மொசாத் கங்காணிகளை, இலங்கைப் பாதுகாப்புத் துறையினருக்குப் பயிற்சி அளிப்பதற்கு அழைப்பு விடுத்ததன் மூலம், சிரிலங்கா தலைவர், தம் தன்னறிவை இழந்து விட்டதோடன்றி, வல்லாளுமையாளர்களின் கைகளிலே ஒரு விளையாட்டு பொம்மையாகவும் ஆகிவிட்டார்.

அவரது செயல், கூட்டுச் சேரா இயக்கத்தின் முதுகில் கத்தியைச் சொருகுவதற்குச் சமமாகும். 14 ஆண்டுகளுக்கு முன்னர், கொழும்பு இசரேலுடன் அரசியல் உறவுகளைத் துண்டித்தது. கவர்ந்து கொள்ளப்பட்ட அரபு நிலப்பகுதிகளிலிருந்து இசுரேல் பின்வாங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தது; இன்னமும் இசுரேல், தான் கவர்ந்து கொண்ட பகுதிகளிலிருந்து வெளியேறவில்லை.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் மனுகுவா நகரில் நடைபெற்ற கூட்டுச் சேரா அமைச்சர்கள் மாநாட்டில் 116 நாடுகளின் படிநிகராளிகள் பங்கு கொண்டனர்: அதில், இசரேலுடன் ஒத்துழைக்கும நாடுகள் ,அதனை உடனடியாக நிறுத்திக்கொள்ளவும் இசரேலுக்கு எதிராக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தப்பட்டன.

அப்படியிருந்தும், கூட்டுச் சேரா இயக்கத்தில் உறுப்பாண்மைபெறும் சிரிலங்கா, இசரேலிய நலனுக்கானதொரு பிரிவை கொழும்புவில் ஏற்படுத்தப் போவதாக, சில நாட்களுக்கு முன்னர் அறிவித்துள்ளது. கூட்டுச் சேரா இயக்கத்தின் நோக்கங்களுக்குக் குழிபறித்து, அதற்கு இரண்டகமிழைக்க செயவர்த்தன முற்பட்டது ஏன்?

அமெரிக்கக் கழுகுகள் திரிகோண மலையின் மீது வட்டமடிப்பதாகவும், அதனை ஒரு படைத்தளமாக்க அவை முயல்வதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியுள்ளன. சிரிலங்கா தலைவரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அவர் அமெரிக்க வல்லாளுமையாளர்களுக்கு உண்மை ஊழியராக நடந்து கொள்ள முடிவு செய்து விட்டார் என்று தெரிகிறது. கூட்டுச் சேரா நாடுகளை அமெரிக்க ஆளுமை என்றுமே ஆதரித்ததில்லை. கூட்டுச் சேரா இயக்கம் வலுப்பெற்றுத் திகழ்வது அமெரிக்க நலன்களுக்கு தாக்கம் ஏற்படுவதாக அந்த ஆளுமை கருதுகிறது.

இந்த இடந்தில், செயவர்த்தன அழைத்து வரவேற்கும் 'மொசாத்' பற்றியும் சில சொற்கள் கூற வேண்டும். அனைத்துலக வல்லாண்மை இனவெறி அமைப்பின் ஓர் உறுப்பாகும் அது; பல நாடுகளிலும் உள்ள உளவுத் துறையுடனும், ஒடுக்கு முறை நிறுவனங்களுடனும் அஃது ஒத்துழைத்து வருகிறது. அந்த ஒத்துழைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நடத்துவது அமெரிக்க 'சி ஐ.ஏ.!'

1981 நவம்பர் 20-இல் அமெரிக்காவுக்கும் இசரேலுக்கும் இடையே ஓர் உடன்பாடு கையெழுத்தாயிற்று. அதன்படி, மூன்ருவது உலக நாடுகளை அமெரிக்கா மீண்டும் வெற்றி கொள்வதற்கு இசரேல் உதவ வேண்டும். படைத்துறைத் தளவாடங்கள் வழங்குவதன் மூலமும், கருத்தாளர்களை அனுப்புவதன் மூலமும், இசரேல் அமெரிக்காவுக்கு உதவ ஒத்துக் கொண்டுள்ளது.

இதுபோதாதென்று, பிரிட்டனிலிருந்து கூலிப் பட்டாளத்தையும் இறக்குமதி செய்ய சிரிலங்கா முன் வந்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, சிரிலங்கா நிகழ்ச்சிகள் இந்தியாவுக்கு ஏதத்தை மேலும் அதிகரிக்கவே செய்கின்றன என்பது தெளிவு.

— ஏ. எசு. மூர்த்தி.

பாட்டாளி வாழாமல் நாடுநலம் வாய்க்காது!

சென்னையில் தேசிய இன விடுதலையை ஆதரித்துப் பொதுக்கூட்டம்!

கடந்த 7-7-84, காரிக்கிழமை மாலை 6,30 மணி அளவில் சென்னை அயன்புரத்தில் உள்ள இணைப்பு அலுவலகம் (Joint-office) அருகில் 'தமிழ் ஈழ விடுதலையை ஆதரித்தும், இந்திய தேசிய இனங்களின் விடுதலையை ஆதரித்தும்' பொதுக் கூட்டம் நடைபெற்றது. முற்போக்குத் தொழிலாளர் கழகத்தைச் சார்ந்த ம. தட்சிணாமூர்த்தி (I C.F. தொழிலாளர்) கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசினார். அன்று மாலை கடுமையாக மழை பெய்து கொண்டிருந்ததால் கூட்டம் சற்று காலம் தாழ்த்தியே தொடங்கப் பெற்றது. கூட்டத் தலைவரைத் தொடர்ந்து திருச்சி முற்போக்கு இளைஞர் அணி சார்பில் தோழர் அரசேந்திரனும், மக்கள் சனநாயக உரிமைக் கழகத் தலைவர், வழக்கறிஞர் ஏ..எம். இப்ராகிம் அவர்களும், 'அறிவியக்'கத்தைச் சார்ந்த பர். 'சாலினி-இளந்திரையன் அவர்களும், பர். சாலை. இளந்திரையன் அவர்களும் தம்தம் கருத்துகளைத் தெளிவுற எடுத்துக் கூறினர். தேசிய விடுதலை பற்றியும், பஞ்சாப் சிக்கல் பற்றியும் ஆழமாக எடுத்து விளக்கப் பெற்றது. அவர்களைத் தொடர்ந்து உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தேசிய இனம் என்பது எது, தமிழ்தேசிய இனத்தின் உயர் செம்மாந்த நிலைகள் எவை, அதன் இக்கால அடிமை நிலை என்ன, அஃது உய்ய எப்படி விடுதலை பெறுவது என்பது பற்றியும் பஞ்சாபிய விடுதலைப் போராட்டத்தினர், மக்களிடையே தம் இபக்கத்தை வலுப்படுத்தாமல், தீவிர நிலையில், அரசோடு நேரடிப் போர் தொடுத்ததனால் ஏற்பட்ட இயலாமையும் இழப்பும் நமக்கு ஒரு பாடமாக அமையும் என்றும், தமிழ்த் தேசிய இன விடுதலையை வலுவாக ஆதரித்தும் பேசினார். அதன் பின்னர் பெரியார் சமவுரிமைக் கழகத் தலைவர் வே. ஆனைமுத்து அவர்கள் தமிழினம் ஆரிய வருகையால் தாழ்ந்துபோன நெடிய வரலாற்றைச் சுருக்கமாகவும், பெரியாரின் பெருந்தொண்டினை விரிவாகவும் கூறிப், போலியான மார்க்சியப் பொதுவுடைமையாளர்களைக் கண்டித்தும் தேசிய இனங்களின் விடுதலையை வலியுறுத்தியும் நிறைவாகப் பேசினார். அவரைத் தொடர்ந்து 'மார்க்கிய-இலெனினிய மக்கள் போர் இயக்கத்' தலைவர் புலவர் கலிய பெருமாள் உலக விடுதலை இயக்க வரலாறுகள் சிலவற்றையும், இந்திய தேசிய இனங்கள் சிலவற்றின் விடுதலை உணர்வுகளையும், பல ஆண்டுகளாக அவை போராடி வரும் நிலைகளையும், தேசிய இனவிடுதலையின் தேவைபற்றியும் சுருக்கமாகவும் அதேபொழுது விளக்கமாகவும் கூறினார். கூட்ட அமைப்பாளர் திரு. செயச்சந்திரன் நன்றியுரை கூற கூட்டம் சிறப்புற பத்தரை மணியளவில் முடிவுற்றது.

கூட்டம் நடைபெறுவதற்குப் பல வகையிலும் உதவியாக இருந்ததோடு, தம் அலுவலகப் பணியாளர் திரு சொல்லாடன் அவர்களையும் கூட்ட அமைப்பாளர்க்குத் துணையாக அனுப்பியிருந்த 'திராவிட சமயம்' இதழாசிரியர் திரு. தெய்வநாயகம் அவர்கள் சிறப்புரையாளர்கள் அனைவரையும் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று தேநீர் விருந்தளித்து மகிழ்வித்து அனுப்பியதோடு, உ.த.மு.கழக முதல்வர் ஐயா அவர்களிடம் தம் சார்பில் தமிழ் நிலத்திற்கு அன்பளிப்பாக உரு. 70 கொடுத்து அன்பொழுகப் புரந்தார். அனைவரும் தத்தம் பகுதிகளுக்குச் செல்ல 'ஏந்துகள் ஏற்பாடு செய்ய அவர் ஈடுபட்ட நிலை எண்ணி மகிழத் தக்கது. O

(1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

சோமனூரில் கொடுக்கப்பெறுகின்ற கூலியைக் காட்டிலும், பல்லடத்திலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் கொடுக்கப் பெறுகின்ற கூலி குறைவாக உள்ளது. இப்படி ஐந்து ஆறு கல் இடைவெளியில் உள்ள ஊர்களில் நடைபெறுகின்ற ஒரே தொழிலுக்கு மூன்று வகையான ஏற்றத்தாழ்வான கூலிகள் கொடுக்கப்பெறுவதை அரசோ மற்ற அரசியற்கட்சி அமைப்புகளோ கண்டு கொள்வதில்லை.

மேலும் இத் தொழிற்சாலைகள் சிறுசிறு ஆலைகளாகப் பரந்துகிடப்பதால் தொழிலாளர்கள் ஒன்று சேரமுடியாத நிலையுள்ளது. அப்படி இருந்தும் ஒருசில இளைஞர்கள் உரிமை உணர்வால் உந்தப்பட்டு உரிமை பெறுவதற்குத் தொழிலாளர்களை அணி திரட்ட முயற்சி செய்யும் பொழுது அவ்வுரிமை உணர்வுள்ள இளைஞர்களைக் கரவாகவும் சூழ்ச்சியாகவும் பலவாறாக அடக்கி விடுகிறார்கள்.

சட்டப்படியாகத் தொழிலாளர்க்குக் கிடைக்கக் கூடிய அடிப்படை உரிமைகள் கூட தொழிலாளர்கள் நல ஆய்வாளர்களின் மெத்தனத்தாலும் கையூட்டு வாங்கிக் கொண்டு விசைத்தறி உரிமையாளர்க்குச்சார்பாக நடக்கின்ற இழிசெயல்களாலும் இன்னும் கிடைக்கப் பெறாமல் தடுக்கப் பெறுகிறது.

இனி, விசைத்தறி உரிமையாளர்களின் நிலையும் அவ்வளவு மேம்பட்டதாக இல்லை, பெரும்பான்மையான விசைத்தறி உரிமையாளர்கள் 4 தறி முதல் 10 தறிவரை வைத்திருக்கும் சிறு முதலாளிகளாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறுமுதலாளிகள் தங்கள் குடும்பம் முழுவதையும் தொழிலாளிகளுடன் சேர்த்துக்கொண்டு தொழிலில் ஈடுபடுத்துகிறார்கள். அப்படிக் குடும்பம் முழுவதுமே தொழிலில் ஈடுபட்டும் கூட சிறிதளவு ஊதியமே கிடைக்கிறது.

ஊதியம் முழுவதையும் விசைத்தறி உரிமையாளர்களுக்கு மேல்நிலையிலுள்ள துணிக் கொள் முதலாளர்கள் எந்தவகை உழைப்புமின்றிப் பெறுகிறார்கள்.

அப்படிக் கொள்முதல் செய்கின்ற தரகு வணிகர்களாகப் பெரும்பாலும் வடநாட்டார்களே இருக்கிறார்கள்.

நிலத்தில் பருத்தி விளைவு செய்யப்பட்டுப் பஞ்சடிக்கும் ஆலையில் பதனிடப்பட்டு. நூற்பாலை நூல் நூற்று, அதைப் பாவாலையில் பாவாக மாற்றி, இறுதியாக விசைத்தறியில் துணியாக நெய்யும் வரை அனைத்து உருவாக்கச் செலவுகளும் சேர்ந்து [பொறிகளின் தேய்மானம், கூலியாட்களின் கூலி, போட்ட முதலீட்டிற்கு வட்டி, மேற்பார்வைக்குச் சம்பளம் உட்பட அனைத்தும் சேர்ந்து] மாத்திரி(மீட்டர்) ஒன்றுக்கு நான்கு உருபா ஆகிறது. ஆனால் இதைக் கொள்முதல் செய்கின்ற தரகன் எவ்வுழைப்புமின்றி ஒருகைமாற்றி விடுவதன் மூலம் மாத்திரிக்கு ஓர் உருபா ஊதியம் அடைகின்றான். நான்கு உருபா துணியை ஐந்து உருபாவுக்கு விற்று விடுகிறான். இனி ஐந்து உருபாவுக்கு வாங்கிய வடநாட்டுப் பெரு வணிகர்கள், துணியைச் சலவை செய்து, வண்ணமேற்றித் திருப்ப உருவாக்கம் செய்த அதே உழைப்பாளிக்கே மாத்திரிக்கு 8 அல்லது 9 உருபாவுக்கு விற்கிறார்கள்.

ஒரு மாத்திரிக்கு 20 காசு குறைகூலி வாங்கிக் கொண்டு மிகை உழைப்புச் செய்து உருவாக்கம் செய்த அதே துணியை 8(அல்)9 உருபாவுக்கு வாங்க வேண்டிய கட்டாய நிலைமை தொழிலாளர்களுக்கு உள்ளது.

வேற்று மாநில, நாட்டு ஆளுமை!

தமிழ்நாட்டிலுள்ள முகாமையான பெருந்தொழில்கள் அனைத்தும் வடநாட்டு முதலாளிகளின் ஆளுமைக்கும் வெளிநாட்டு முதலாளிகளின் ஆளுமைக்கும் உட்படுத்தப்பட்டிருப்பது போலவே, விசைத்தறித் தொழிலும் வடநாட்டு முதலாளிகளின் ஆளுமைகட்கு உட்படுத்தப்பட்டு இருப்பதுதான் விசைத்தறித் தொழிலாளர்களின் இழிநிலைக்கு முகாமையான கரணியமாகும்.

ஏமாளித் தமிழ்த் தொழிலாளிகளும் ஏமாளித் தமிழ் முதலாளிகளும் உழைத்துக் கொடுத்த ஆக்கம் முழுவதையும் வடவர்களே சுரண்டி வருவதினால் மொத்த தமிழரின் நிலையும் இரங்கத்தக்க இழிவாக உள்ளது. இந்த நிலை நீடிக்கப் பெறுமானால் தமிழன் இந்தத் தொழிலையும் முற்றாக இழந்து விட வேண்டி வரும். எதற்கும் வடநாட்டான் கையையே எதிர்பார்த்து நிற்பதுபோலவே இதற்கும் எதிர்பார்த்து கையேந்த வேண்டிய இழிவான நிலை ஏற்படும். இந்தச் சிறுமுதலாளிகளெல்லாம் வடநாட்டுப் பெருமுதலாளிகளுக்கு ஒரு பொதுநிலைத்தொழிலாளி போலவே இருக்கின்ற நிலைகளை இங்குள்ள முதலாளிகள் எண்ணிப்பார்ப்பார்களாக!

தமிழக அரசு இந்த விசைத்தறிச் சிக்கலில் உடனே தலையிட்டுத் தொழிலாளர்களின் குறைபாடுகள் நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமாய் 20,000 தொழிலாளர்களின் குடும்பங்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ் வட்டாரங்களில் வாழும் 20000 விசைத்தறித் தொழிலாளர்களின் பொதுவான கோரிக்கைகள் இவை :

1) இப்பகுதியில் உள்ள அனைத்துத் தொழிலகங்
1) இப்பகுதியில் உள்ள அனைத்துத் தொழிலகங்களிலும் அரசின் தொழிலாளர் நலச் சட்டங்களை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும்.

2) இங்குள்ள தொழிலகங்களில் பணியாற்றும் எல்லாத் தொழிலாளர்களையும், உடனே மாதச் சம்பளத்திற்கு நிலையான தொழிலாளர்களாகப் பதிவு செய்ய வேண்டும்.

3) அவர்களுக்குத் தொழிலாளர் நலச் சட்டங்களில் கூறப்பட்டுள்ள அனைத்துச் சலுகைகளையும் நலன்களையும் உடனடியாக வழங்குதல் வேண்டும்.

4) ஒருநாளில் தொழில்செய்யும் நேரத்தை 8 மணி நேரமாகச் செய்து, ஒவ்வொரு தொழிலாளர்க்கும் குறைந்த பக்கச் சம்பளத்தைத் தொழிலதிகாரிகளுடனும், தொழிலாளர்களின் படிநிகராளிகளுடனும் கலந்து உறுதி செய்தல் வேண்டும்.

5) நாளுக்கு 8 மணி நேரத்திற்கு மேல் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, மிகை நேரக் கூலியாக இரட்டிப்புக் கூலி வழங்குதல் வேண்டும்.

6) நோய் வாய்ப்பட்ட தொழிலாளர்களுக்கு மருத்துவ வாய்ப்புகள் வேண்டும்.

7) அரசு விடுமுறை நாட்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வேண்டும். அந்நாள்களில் பணி செய்தால் இரட்டிப்பு நாட்கூலி தருதல் வேண்டும்.

8) கிழமைக்கு ஒருநாளும் ஆண்டுக்குப் பதினைந்து நாள்களும் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வேண்டும்.

9) 14 அகவைக்குக் கீழ் உள்ள சிறுவர்களைப் பணிக்கு வைப்பதில் அரசுச் சட்டம் கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும்.

20) ஆண்டு முடிவில் தொழிலாளர்களுக்குத் தரும் நன்னர் (Bonus) தருதல் வேண்டும்.

— நம் சிறப்புச் செய்தியாளர்.

(5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இரண்டு மூன்று அடி அளவிற்கு வளர்ந்த மணமான புற்கள் சூழ. கற்கள் சிதற செம்மாந்து நின்று கொண்டிருந்த அக் குன்றத்தின் மீது குழுகுழுவாக உரவோர்கள் ஏறிய காட்சி அடிமைத் தமிழினத்தை மீட்டெடுக்கப் புறப்பட்ட வீரர்களின் முயற்சி போன்றிருந்தது. பல்லடம் அன்பர்களை அழைத்துக் கொண்டு திரு. வியனரசு குன்றின் உச்சிக்குச்சென்று தமிழக விடுதலை முழக்கங்களை முழங்கியது அம் மலைப் பகுதிகளையே அதிர வைத்தது. அக் குழுவைத் தொடர்ந்து அனைவரும் உச்சி சென்று அணைப்பட்டி, நிலக்கோட்டை, மற்றும் பல சிற்றூர்களை வலம் சூழ அணைத்திருந்த அழகிய வையை ஆற்றையும், அதன் அருகில் செழித்திருந்த தோப்பு, துறவுகளையும் கண்டு தமிழ் நங்கையின் எழில் வனப்புகளை எண்ணி எண்ணி அதை மாற்றானிடம் அடிமைப் படுத்திய நிலைகளை நினைவு கூர்ந்து உணர்வு பெற்று முழங்கிய விடுதலை முழக்கங்கள் தமிழகத்தையே தனியாகப் பிய்த்து விடும்படி ஒலித்தன.

சித்தர் குன்றத்தின் நடுப்பகுதியில் குளிர்ந்து நிறைந்திருந்த இளநீர்ச் சுவை கொண்ட சுனை நீரை உரவோர்கள் சுவைத்துச் சுவைத்துக் குடித்தப்பாங்கு அலைந்து திரிந்து வேட்கை கொண்ட வேங்கைகள் அமைந்து பருகுவதைப் போன்றிருந்தது. (தொடரும்)

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப்பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியீடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.